உ

முருகனே துணை.

சிவகாசி

சிவசுப்பிரமணியக்கடவுள்மீது

பதிகம்.

இது

சிவகாசி வித்வசிரோமணி

ஸ்ரீமான் தா. ச. சின்னக்கனி நாடாரவர்களால்

இயற்றப்பெற்றது.

[illegible]ளையங்கோட்டை

[illegible]வில் அச்சிடப்பெற்றது.

[illegible]918.

20 OCT 1919 MADRAS

Q26:38·219551
N18
125380

உ

முருகனே துணை.

சிறப்புப்பாயிரம்.

சிவகாசி

இந்துநாடார் விக்டோர்யா ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதராகிய புதுச்சூரங்குடி
மதுரகவி ஸ்ரீமான்

S. சுப்பிரமணியக்கவிராயரவர்கள்

இயற்றிய

நேரிசை ஆசிரியப்பா.

திருவுள மகிழ்ந்து மருவிய கமலப்
பூவளர் பழனத் தேவளர் கரும்பின்
சாரமுண் போர்க்கந் நேரமீந் தெஞ்சுஞ்
சாற்றினைக் காய்ச்சவுள் ளேற்றிடும் பூம்புகை
மப்பர முதுதது வம்பர முலவும்
இரவித்தலம்வரை விரவிச் செந்நிறம்
பூண்டது பொலிவுட னுண்டுறச் செய்யும்
வளமுடன் காண்போர்க் களவிலா வின்பம்
ஈண்டிடச் செய்வளம் வேண்டிய மருவும்
பாண்டிநா டெனுமோர் பூண்டிகழ் மின்னாள்
முகமென விளங்கிச் சகப்பல புகழ
ஆடகத் தாற்செய் மாடம் துலவுங்
கற்புறு மகளிர் அற்புடன் வளர்க்கும்
பூவைகட் கோதிடுந் தாவிலாப் பாடற்
பகுதியைக் காவிற் றெருகுதியாய் வாழும்
தத்தைகள் வினவியத் தையல் நல்லார்
செவியுற வுரைக்கவவ் வவிர்மணிப் பூணார்
ஈதென புதுமையென் றேதிமே னோக்கிடச்

சுகமுறு பெண்ணோர் நகைபெறு மெழிலினில்
நாட்டமுற் றிமையா நாட்டமுற் றிருந்தனர்
என்றுரைசெய நலந்துன்றிடும் நகரம்
காசியின் மேற்சிவ காசிநன் னகரம்
தங்கிவாழ் சீலன் பொங்குநன் னூலன்
கல்வியைக் கற்றோன் நல்[illegible] யுற்றோன்
நீதியை யணிந்தோ னோதியைப் பணிந்தோன்
பெரியவர் புகழ்க்ஷத் திரியவம் சத்தோன்
பொங்கருட் சீரான் சங்கணப் பேரான்
தவத்தினி லுதித்தோன் பவத்தினை மிதித்தோன்
பலத்தினிற் சிறந்தோன் மலத்தினைத் துறந்தோன்
கலைக்கட னயந்தான் மலைத்தடம் புயத்தான்
கற்றவர்க் கினியன் மற்றவர்க் கினியன்
வாகுவின் மாரன் யோகுசெய்தீரன்
மக்கள் சம்பத்தான் மிக்கவெண் சித்தான்
மணமலி தாரன் குணமலி சீரன்
வண்மைக் குதாரன் ஒண்ணிதிக் குபேரன்
பார்வதி பாலன் கூர்நுதி வேலன்
பைஞ்சரவணத்தன் குஞ்சரி மணத்தன்
சிவற்குப தேச னுவக்குநற் றேசன்
ஆறக் கரத்தன் வீறுக்கிரத்தன்
சூரர்தம் மாவி வேரறத் தாவி
அண்டரைக் காத்தான் றொண்டர் நோய் தீர்த்தான்
ஆறிரண் டத்தன் நாறுநீ பத்தன்
பொற்கழல் போற்றும் அற்புள மனத்தன்
வன்னக்கனிவுறுஞ் சின்னக்கனி யெனும்
நா[illegible]லொருநா ளாவலுற்றெம்பாற்
றன்[illegible]னுவகல்வகை யென்னை யெனநா[illegible]
முருகனைப்பாடில் வருபிணி யறுமெனச்
செப்பியவண்ண மொப்பிநற் பதிகம்
பாடினன் குகனருள் நீடிய திறத்தால்
வெம்பிணி நீங்கிச் செம்பொருள் சாங்கி
வளமிக வோங்கி யுளமதில்
வேண்டிய நன்னிதி பூண்டுவாழ்ந்தனனே.

சிறப்புப்பாயிரம் முற்றுப்பெற்றது.

800 009

உ

முருகனே துணை.

சாற்றுக்கவிகள்.

திருநெல்வேலி,

முருகதாச சுவாமிகளென்றுந் திருப்புகழ்ச் சுவாமிகளென்றும்
விளங்கும் சந்தச்சரபம் ஸ்ரீலஸ்ரீ தண்டபாணிசுவாமிகளின்
பாதசேகரர் ஆகிய பாவூர் சந்தப்புலி ஸ்ரீமான்
பா. மு. பார்த்தசாரதி நாயுடவர்கள்
இயற்றியவை.

கட்டளைக் கலித்துறை.

பொற்பதிகம் படைக்குஞ் சிவகாசிப் புகழ்முருகோன்
அற்பதிகம் பத்தனைவென்ற மாலினரு மருகன்
பற்பதிகம் பரன்சே யோற்குச் சூட்டினன் பைந்தமிழால்
நற்பதிகம் பரிந்தெங்கள் சின்னக்கனி நாவலனே.

வெண்பா.

சொற்கும் பொருட்குந் தொடரணிக்கு மோர்வைப்பாய்
நிற்கும் பதிகம் நிகழ்த்தினான்—அற்குழலாள்
தென்னக் கனிசேய் சிவகாசி வாழ்குகற்குச்
சின்னக் கனிப்புலவன் றேர்ந்து.

சந்தவிருத்தம்.

தனனதன தனதான தன்னத்தனத்தன தன.

அருமறையின் முடிமீது நடனமிடுமிருதாளன்
அழகுபெற விரிதோகை மஞ்ஞைப் பரிக்குரிமையோன்
இருமகளிர் மணவாளன் ஒளிதிகழும் வடிவேலன்
இசை பெருகு சிவகாசி வன்னப்பதிக்குமரவேள்
உருவினுயர் திரள்தோளின் மிசைபதிக மெனுமாலை
உததிநிகரருள்மேவ எண்ணித்தொடுத்ததவினன்
ஒருபொழுதும் மறவாமல் முருகனடி மலர்பேணும்
உசிதகுணம் நிறைவான சின்னக்கனிப்புலவனே.

சிவகாசி

வெற்றிவிநாயகர் கோயிற் பாடசாலை உபாத்தியாயரும்
இந்நூலாசிரியரின் முதல் மாணுக்கருமாகிய ஸ்ரீமான்
மா. கு. வ. சுப்பையா நாடாரவர்களியற்றியவை.

கட்டளைக்கலித்துறை.

வன்னக்கனிக்குல கிரேழுந்தாய வரதனெறி
நுன்னக்கனிக்கு மதவேளையட்ட மெய்த்தூயவர்க்குந்
தென்னக்கனிக்கும் பொருள்சிவகாசிநற் சேவலன்மேற்
சின்னக்கனிக் குணபூமானு வந்தருஞ் செந்தமிழால்.

வெண்பா.

திருப்பதிகமாகத் திறலமரர்க் கென்றும்
விருப்பதிக மாகநனி விண்டான்—மருப்பதிகந்
தத்தரியிற்போகி சயனன் கடைந்தளித்த
புத்தமுதக் தின்னிரதம் போல்.

சிவகாசி

ஸ்ரீமான் தா. கா. பெ. சங்கரலிங்க நாடார் குமாரர் மக-௱-௱-ஸ்ரீ
காளியப்ப நாடாரவர்களியற்றியது.

கருப்பதிகந் தரமுறுகாச் சிவகாசிநகரின் முருகனுக்கன்பாக
விருப்பதிகந் தரப்புநிதம் விளங்குசின்னக் கனிக்கவிஞன் விளம்பினனற்
றிருப்பதி கந்தரச்சிறையை யரிந்தமரர் கற்பமதிற் சிறந்துவாழுந்
தருப்பதிகந் தரம்பனுக்கி யிருகாகம் பஞ்செயநற் றமிழினலே.

சிவகாசி

இந்து எலிமெண்டேரி ஸ்கூல் தலைமை உபாத்தியாயரும் இந்
நூலாசிரியரின் மாணுக்கரிலொருவரும் ஆகிய ஸ்ரீமான்
K. சர்க்கரைப்புலவரவர்களியற்றியவை.

கட்டளைக்கலித்துறை.

வந்தனத்தானனத்தான்றினந்தேடு வரநதியார்
கந்தனத்தான்றரு சேய்சிவகாசியன் காசினியோர்
வந்தனத்தான் சுகமின்னும் புகலிடை வள்ளி வள்ளக்
கந்தனத்தார் வம்மைவத்தோங்குஞ்சடாக்கரக்காவலன் மேல்.

வெண்பா.

பாப்பதிகஞ்சொற்றுனிப் பார்புகழ்சின்னக்கனி வேள்
பூப்பதிகந்தக்கோர்கள் போற்றுமனுக்-காப்பதிகம்
பெற்றவராகன் சசிமைப்பித்தையினிற் சூடியபொற்
கற்றவரானுங் களிக்கக்கண்டு.

சாற்றுக்கவிகள் முற்றுப்பெற்றன.

உ

முருகனே துணை.

சிவகாசி

சிவசுப்பிரமணியக்கடவுள் மீது பதிகம்.

125330
Q26:38.2;1195 S
M18

விநாயகர் துதி

வெண்பா.

துதிவளரு மின்பமுறுந் தூயசிவ காசிப்
பதிவளருஞ் சண்முகன்மேற் பண்பாய்—மதிவளரு
நற்பதிகம் பாடிடவெந்நாளுமன்பர் போற்றுகின்ற
கற்பதிகம் பெற்றமுன்னோன் காப்பு.

நூல்

உள்ளமதிலடியவர்களுள்ளு பரமானந்த
 வோநமசிவாயபரம
னுற்றமதுராபுரியினற்றவ மிகுந்து வள
 ரொருவழுதி தனைமருட்டிக்
கள்ளமிகு சமணரவர் மதமுறத்தேற்றிடுங்
 காலையவனுற்ற கூனுங்
காய்ச்சலையுநீக்கியருளெந்தையேயென்று நின்
 கான்மலர்க்கழல்கள் மீதி
லெள்ளலில்லாத கவி சூடித்துதிக்குமிவ்
 வேழையேற் குற்ற பிணியி
னேற்றத்தை நீக்கி நற்சுகமுதவுவாய்கருணை
 மிது வலது வேறுமுண்டோ
தெள்ளமுத மனைய மொழி மின்னார்கள் கற்பினாற்
 றிங்கண்மும் மாரி பெய்து
சேமமிக வோங்கிடுஞ்சிவகாசி நகரின்வளர்
 தேவனே முருகவேளே. [1]

துன்னுதிரை வாரிதிமடுத்தாரின்புறச்
 சுகபோக பூமி நல்கித்

தூயசிறுகாலங்குலாவி வருசாரலுந்
தூதைவரியரிக் குழாங்கள்
மன்னுபொதியாசலத்துற்றிடு கடோற்பவன்
வணங்குபர ஞான குருவே
வம்பைப்பிதிர்த்தெழு பயோதரச்சிறுமியரின்
மயலென்னு மம்புராசி
தன்னிலே வீழு சிறியேன் பிணியகற்றியுன்
றாள் மலரை யேத்த வருள்வாய்
சங்கின முழங்குபணை யுந்தரணிகிள்ளையைத்
தாக்கிடும்பசிய தாற்றுத்
தென்னை வனமும் பனச மாகதலி ஞான்றுஞ்
செழுந்தேற லூற்றுமருவி
திகழ்வளமலிந்திடுஞ் சிவகாசிநகரின் வளர்
தேவனே முருகவேளே [2]

நஞ்சுகு மெயிற்றுரககேதனதுரோகியந்
நாட்கலை யொத்த மயிலை
நச்சிக்கவான்மிசை யிருத்திளையவாவென
நவின்றிடுங்காலையவள்பொற்
கிஞ்சுகமலர்ந் தலமரத்துனியை நீக்கிமுற்
கிருபை பொழிதூயகருட
கேதன முராரி மருகா வெழினிரம்பிய
கிராதர் குயிலுக்கிறைவனே
கஞ்சுருதியறியேனெனத் தளையிலிட்டருங்
கந்தமால்வரையின்மேவிக்
கற்பொடு படைத்த குமரா வெனது பிணியினைக்
கண்டனஞ் செய்யுமய்யா
சிஞ்சுபச்சோலையிலமர்ந்துலவுமந்திகள்
சீதப்பலாவிலெட்டித்
தீங்கனிகுதட்டு நற்சிவகாசி நகரின் வளர்
தேவனே முருகவேளே. [3]

சூன்முதிர் குயின் குழாமன்னகறையுடலமுந்
துண்டமதியொத்த வெயிறுஞ்
சொல்லுருமெனத்தகைய தாரகனுடன் குன்று
துகள்பட்டுடைந்துகெடவிற்

கால் நுதிச்சத்திவடி வேலினைவிடுங்குழக
கற்றவர் வணக்கு பெருமான்
காதலகராசல முகப்பாற்கநுசனே
கந்தரபபாராயண மமவு
மால்துயரகன்றிடச்செய்த குகவென்பிணியை
மாற்றுவதுனக்கருமையோ
வள்ளவாய் மலரின்மிசை யோகிம முறங்கிடு
வளம்பல நிறைந்த வருவிச்
சேல்கமுகின் மடல்கீறியும்பரிற்ருவிவான
செல்லைக்கிழித்து மப்பாற்
சென்றேற வருந்திருச்சிவகாசி நகரின் வளர்
தேவனே முருகவேளே. [4]

துள்ளு நதியும் பிறைப்பிள்ளையுங் கொன்றையுந்
தும்பையுந்துத்தியரவுஞ்
சூடியசடாதரனிருந்த தனி வெற்பைத்
துளக்கிய விலங்கை வேந்தன்
தள்ளரிய கம்பத்தினைத்தடிந்தவனியிற்
றுல பலமன்ன வீழ்த்தித்
தகமைபெறு வடணர்க்கரசினை யளித்திடுந்
தாசரதிமருகனான
வள்ளலறுமுக குமரதேசிகா நின்றுதி
மறந்திட்ட கடையனேனும்
வந்தபிணி யென்னை விட்டோடும்படிக்கு நீ
மாகிருபை செய்யுமய்யா
தெள்ளு தமிழ் வல்லோர்களெஞ் ஞான்று மேவிநற்
செல்வம் தழைத்து மினிதாய்ச்
சீர்பெருகி வாழ்ந்திடுஞ் சிவகாசி நகரின்வளர்
தேவனே முருகவேளே. [5]

வேதவுததிக்கெல்லை கண்டறத்தாற்றினை
விரும்பிநனியீட்டுதகையார்
மிருகண்டெனும்புநித வித்தகனியற்றுதவ
மேன்மையாற் பனகமேந்தும்

பூதலம் வியப்புற வுதித்த சிறுபாலகன்
புயனிறச்சமணை வென்று
மிகு ஞானம் ஆய யேற்றுதவி விபுகரும்
புகலிப[illegible]காயுளைத்
தாதநியிதான் மிசைவரும் பரமனே யென்று
தாட்கமல மலரையுன்னத்
தந்தவன் புதல்வ நீ யென்றுயரகற்றிடத்
தாமதமு மின்னு மேனோ
சீதரன் மகன்றனு வுயிர்த்த மணி கருவெனச்
சிறகரால் நீவுமெழில் சேர்
செங்காலனங்குலவு சிவகாசி நகரின் வளர்
தேவனே முருகவேளே. [6]

தொல்லோர் வகுத்தமனு நீதிநெறி வழுவாது
சொன்னலம் பெருகியதிம
துரமருவுகலைகளின் சொற்சுவை பொருட்சுவை
துகளறக் கற்றுணர்ந்த
வல்லோர்வியப்புறு மணமலைக்கிளியுரைசெய்
வண்கவியை யேற்றசெவியில்
மன்னுதமிழணுவு மறியாத சிறுநாயேன்
வழுத்துபுன் பாடல்தனையு
நல்லோகை செய்துகேட் டென்பிணியைநீக்கியுன்
னுட்கமல பாதபக்தி
நன்கருளவேண்டு மறுகாலின முழங்கிடு
நறும்போதின் மாலைபுனையுஞ்
சில்லோதியார் வடித்தூற்று கழிநீர் மிகுஞ்
செய்த்தலைபிலோடி ஞான்றுஞ்
செந்நெலை வளர்த்திடுஞ் சிவகாசி நகரின்வளர்
தேவனே முருகவேளே. [7]

சலதர மடங்கலலவன் [illegible]
தாளமதி யேற்றுதனுசு
தம்மை மின்னுரோதி யிடைமுழந்தாள் துடை
தனவதன நெற்றியென்று

பலகாமிசைத்திசைத்தவர் கலவிநாவினைப்
        பகருதற்கரிய மயலாற்
பணவகிபரித்தபுவி தன்னிலெஞ்ஞான்றுமே
        பாடித்திரிந்துவிட்டே
னலதாங்காது வடிவேற்கரவிநோத நின்
        றைக்கரத்தையோதி
யஞ்சலிக்கேனில்லையாயினும் பிழைபொறுத்
        தாதரித்தாளுவாய் செந்
நிலதரந்தோறும்விளை யாடுஞ்சடானனத்
        தேசிகா பசியமென்காற்
சிகியில்வருகுமரனே: சிவகாசிநகரின்வளர்
        தேவனே முருகவேளே. [8]

அங்கண்மாநிலமீது தங்குமுயிர்யாவுநின்
        னருளினல் மன்னிவாழு
மப்படியிருக்க வென்மட்டில் நீ கருணைபுரி
        யாதுவாளாவிருந்தாற்
செங்கண்மான்மருகனென்றுனையாருரைப்பாது
        தேரியென்னைவுநீங்கச்
சித்தம்வைத் தாண்டென்னைவாழ்விப்பதுன்கடன்
        சேவூருமாதிசத்தி
யெங்கணே மாணிக்கமே பசுந்தேறலே
        யின்பமொழி பேசுகிளியே
யிங்குவாவா வெனவழைக்கவருகுழகனே
        யேறு மயிலேறு குகனே
திங்கண் மண்டலம் வரையளாவியப்பாலுமுயர்
        செங்கனகமாடநீடித்
தேசுமிகவோங்கு நற்சிவகாசி நகரின்வளர்
        தேவனே முருகவேளே. [9]

தந்தைதாய்சற்குருதெய்வந்தனை வந்தனை
        சற்றுமனமோடுபுரியாத்
தாழ்மையால்வந்த பிணியாயினுநின தாவிழி
        சாத்திவிடிவிரவி முன்னம்

வந்தபனிபோனீங்குமல்லாது வேதனையு
    மன்னுமோ முன்னைநாளில்
மாமறைச்சிறுவனறியாமையாற் செய்தபழி
    மாற்றியவனுற்ற பெருநோய்
சிந்தவருள்செய்தவனு முந்தையலவோகுமர
    தேசிகா பரமகுருவே
சித்தநயமுற்றெனது நோயகன்றோடவருள்
    செய்தெனைக்காக்கவருவாய்
செந்திருவையனைய நல்லார்வளர்க்கின்றகிளி
    தேடரியபூவை தமிழைச்
செப்புகிற வளமைமிகு சிவகாசிநகரின்வளர்
    தேவனே முருகவேளே. [10]

வாழி.

கலிவிருத்தம்.

கந்தவேளுங் கவினிரு மங்கையும்
நந்தலில்லா நவிரமுந் தொண்டரும்
செந்தமிழ்க்கட லுஞ்சிவகாசியும்
இந்தநூலும் இனிதுற வாழியே.

முற்றுப்பெற்றது.

முருகப்பெருமான்றிருவடிகளே சரணம்.

600 008
17530